**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.85 of 2017

Deposition of D.W.1

Name of the Witness: திருமதி.அழகுராணி

Date : 13.03.2025

***சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி***

4) ராஜகோபால்கவுண்டருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று நியாபகம் இல்லை. 1967 பாகபிரிவினை பத்திரத்தில் ராஜகோபால்கவுண்டரின் உடன் பிறந்த பெரியசாமியின் சொத்துக்களை தான் பாகம் பிரிக்கப்பட்டதாக நான் சாட்சியம் அளித்துள்ள நிலையில் ராஜகோபால்கவுண்டருடன் உடன் பிறந்தவர்கள் யார் யார் எத்தனை பேர் என்று தெரியாது என்று நான் சொல்வதால் எது உண்மை என்றால் பெரியசாமிகவுண்டா ராஜகோபால்கவுண்டருடன உடன பிறந்தவர் என்று எனது அம்மா சொல்லி தெரியும். பெரியசாமிகவுண்டரின் மனைவி பெயர் எனக்கு நியாபகம் இல்லை. பெரியசாமிகவுண்டரின் மனைவியை நான் பார்த்தது இல்லை. ராஜகோபால்கவுண்டரின் உடன் பிறந்தவர்கள் யார் யார் என்று எனது அம்மாவிற்கு தான் தெரியும் என்றால் சரிதான்.

5) 17.10.1967 தேதியிட்ட வா.சா.ஆ.2 பாகபிரிவினை பத்திரத்தில் என் அம்மா மங்கம்மாள், என் சித்தப்பா சாம்ராஜ், ராஜா, சாம்ராஜின் மனைவி அலமேலு தரப்பினர்கள். அந்த ஆவணத்தில்

யுவராஜ், இளவரசன், பிரபு ஏன் தரப்பினராக இல்லை என்றால் என் அம்மா என்னிடம் யுவராஜ் இறந்து விட்டதாகவும், என் அம்மா, சாம்ராஜ், ராஜா, சாம்ராஜின் மனைவி அலமேலு மட்டும் தான் பெரியசாமிகவுண்டரின் சொத்துக்களை அனுபவித்து வந்ததால் அவர்கள் மட்டும் ஊர் பெரியவர்களை வைத்து பேசி பாகபிரிவினை பத்திரம் எழுதி கொண்டார்கள். அந்த ஊர் பெரியவர்கள் யார் யார் என்று எனக்கு தெரியாது. சாம்ராஜ் தரப்பினராக இருக்கும் போது அவருடைய மனைவியும் ஏன் அந்த பாகபிரிவினை பத்திரத்தில் தரப்பினராக சேர்க்கப்பட்டதற்கு என்ன காரணம் என்றால் ஊர் பெரியவர்களை அலமேலு கேட்டதால் அவரையும் அந்த ஆவணத்தில் தரப்பினராக சேர்க்கப்பட்டதாக எனது அம்மா சொன்னார்.

6) எனது அப்பா வேலையும் எதுவும் செய்யாமல் எனது தாத்தாவின் நிலத்தில் விவசாயமும், எனது தாத்தா செய்து வந்த தொழிலை செய்து வந்தார். என் சகோதரர் இறந்த போன ராஜவேலு அரசுக்கு சொந்தமான துப்பாக்கி தொழிற்சாலையில் கொஞ்ச நாள் வேலை செய்து பின்னர் அவரே வெளியில் வந்து விட்டார். ராஜவேலு திருச்சியில் இருக்கும் ஆர்டினன்ஸ் தொழில்சாலையில் 13 வருடம் வேலை செய்து வந்தார் என்றாலும் அவருடைய சம்பளத்தை என் அம்மாவிடம் கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. அவர் கொஞ்ச நாள் தான் வேலை செய்து வந்தார். ராஜவேலுவின் 13 வருட சம்பளத்தை அவர் எனது அம்மாவிடம் கொடுத்தார் என்றாலும், அந்த பணத்தை

வைத்து தான் எனது அம்மா கடை, கட்டிடங்கள் கட்டினார் என்றால் சரியல்ல. மேலும் ராஜவேலு கொடுத்த சம்பள பணத்தை மூலதனமாக கொண்டு என் அம்மா லேவாதேவி தொழில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. ஆனால் என் அம்மா அவருடைய அம்மா வீட்டில் அவ்வப்போது கொடுக்கும் பணத்தில் சுற்றியிருக்கும் கடைக்கு வட்டிக்கு பணம் கொடுப்பார். இந்த விவரத்தை என்னுடைய பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்று நியாபகம் இல்லை.

7) என் அம்மாவின் அம்மா பெயர் குள்ளம்மாள் (எ) லட்சுமியம்மாள், என் அம்மாவின் அப்பா பெயர் சின்னபையகவுண்டர். என் அம்மாவிற்கு அண்ணாமலை, கிருஷ்ணன் என்ற சகோதரர்களும், துளசியம்மாள் என்ற தங்கையும் இருந்தார்கள். என் அம்மாவின் அம்மா குடும்பம் வசதியில்லாத குடும்பம் என்றாலும், என் அப்பாவின் அப்பாவின் வசதியான குடும்பம் என்றால் சரியல்ல. என் அம்மாவின் அப்பா ரோடு காண்டிரேக்டர் என்று கேள்விபட்டேன். அவருக்கு நல்ல வசதியிருந்தது. என் அம்மா சொன்னதாக நான் சொல்லியுள்ள விவரங்கள் எல்லாமே எனக்கு நேரடியாக தெரியாமல் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8) தாவா சொத்துக்களான வரி எல்லாம் ராஜகோபால் கவுண்டர் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. எனது அம்மா பெயரில் உள்ளது. தாவா சொத்துக்களுக்கு ராஜகோபால் கவுண்டர் தான் அவர் பெயரில் சொத்து வரி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. எனது அம்மா பெயரில்

தான் உள்ளது. 7ம் பிரதிவாதி முகமது அலி கிளப் ரோடில் காய்கறி கடை வைத்திருக்கிறார். 50 வருடத்திற்கு மேலாக காய்கறிகடை வைத்துள்ளார். என் அம்மா மங்கம்மாள் முதலில் கூட்டு குடும்பமாக இருந்த போது 7 முதல் 10 பிரதிவாதிகளிடமிருந்து வாடகை வசூல் செய்து பொது குடும்பத்திற்கு செலவு செய்தார் என்றாலும், பின்னர் ராஜவேலு தான் வாடகை பணத்தை வாங்கினார் என்றால் சரியல்ல. எனது அம்மா தான் வாங்கினார்.

9) வாதிகள் வா.சா.ஆ.7 வாடகை ஒப்பந்த பத்திரங்கள் வாடகைதாரர்களிடம் போட்டு அவர்கள் தான் வாடகையை பெற்று கொண்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல. ராஜவேலு தான் வா.சா.ஆ.8 நகராட்சிக்குண்டான வரிகளை செலுத்தி வந்துள்ளார் என்றால் ராஜவேலு பேரில் உள்ளது எனக்கு தெரியாது. எனது அம்மா பெயரில் வரி வசூல் உள்ளது தான் தெரியும். வா.சா.ஆ.6 டவுன் சர்வே ரிஜிஸ்டரில் தாவா சொத்துக்கள் ராஜவேலு பெயரில் பதிவாகியுள்ளதாக உள்ளது என்றால் சரியல்ல. என் அம்மா ராஜவேலு பெயரில் பட்டா மாற்றப்பட்டது சம்பந்தமாக தாசில்தார், ஆர்டிஓவிற்கு மனு கொடுத்து விசாரணை செய்யப்பட்டது. ஆனால் இது வரை எந்த உத்திரவும் போடவில்லை. வாதிகள் தரப்பில் விசாரணைக்கு ஆஜராகவில்லை. என் அம்மா மனு கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியும். நானும் உடன் சென்றிருந்தேன். என் அம்மா இறந்த பிறகு பலமுறை சென்று கேட்டோம். ஆனால் சரிவர பதில் எங்களுக்கு அளிக்கப்படவில்லை.

என் அம்மா கொடுத்த மனுவின் மீது நடவடிக்கை எடுக்கசொல்லி எழுத்து பூர்வமாக ஏதேனும் மனு கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. என் அம்மா மனு தாக்கல் செய்தார் என்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சி முதலில் நியாபகம் இல்லை என்று சொல்லி விட்டு பிறகு கொடுத்ததாக சொல்கிறார்.

10) என் அம்மா 12.12.2022ல் இறந்தார். என் அம்மா இறந்த பிறகு யார் வாடகை வசூல் செய்கிறார்கள் என்றால் என் அம்மா யார் யாருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார்களோ அவர்கள் வாங்கி கொள்கிறார்கள். ரிஸ்வான் தற்போதும் வாடகைக்கு இருக்கிறார். அவரிடம் வாடகையை செந்தில், வெங்கடேசன், நான், பூங்கொடி மாற்றி மாற்றி வாங்கி கொள்கிறோம். போன மாதம் யார் வாடகை வாங்கினார் என்று தெரியவில்லை. 6, 7 மாதங்களுக்கு முன்பு வாடகை வாங்கினேன். 2017ல் 2ம் வாதி என்னை அடித்து போலிஸ் கேஸ் ஆனாது. அதற்கு பிறகு 2017லிலிருந்து நான் வாங்கவில்லை. மற்றவர்கள் வாங்குகிறார்கள்.

11) நாங்கள் வாடகை வாங்குவதற்கு ரசீது எதுவும் கொடுப்பதில்லை. பணமாக தான் கொடுப்பார்கள். நான் பணியில் இருந்த போது வருமான வரி கட்டினேன். தற்போது கட்டுவது இல்லை. சாட்சி தற்போது 2017ல் வாடகை கேட்டபோது பிரச்சனை ஏற்பட்டதால் அதற்கு பிறகு தான் வாடகை பெற்று கொள்ளவில்லை என்று சொல்கிறார். 8ம் பிரதிவாதி அஸ்கர்அலியை எனக்கு தெரியும்.

அவர் பைப் கடை வைத்து வாடகைக்கு இருந்தார். அவர் எப்போது கடையை காலி செய்தார் என்று தெரியுமா என்றால் அது பொது சொத்து என்பதால் எப்போது காலி செய்தார் என்று எனக்கு தெரியாது. அவர் காலி செய்த பின்னர் கடை காலியாக இருந்தது. தற்சமயம் அரசு மதுபான கடைக்கு வாடகைக்கு விட்டிருப்பதாக தெரிய வந்தது. வாதிகள் தான் வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய அனுமதியில்லாமல் விட்டிருக்கிறார்கள். மதுபான கடைக்கு முன்பாக 2ம் வாதி திலீபன் அதில் ஓட்டல் கடை வைத்திருந்தார் என்றால் ஓட்டல் கடை இருந்தது தெரியும். திலீபன் வைத்திருந்தாரா என்று தெரியாது. 7ம் பிரதிவாதியிடமிருந்து வாதிகள் தான் வாடகை வாங்கி கொண்டிருக்கிறார்கள் என்றாலும், 8ம் பிரதிவாதி கடையை காலி செய்த பிறகு அவர்கள் தான் வாடகையை விட்டு வாடகை வாங்கி கொண்டிருக்கிறார்கள் என்றால் ரிஸ்வானிடமிருந்து நாங்கள் தான் வாடகை வாங்கி கொள்கிறோம். மதுபான கடைக்கு அவர்கள் தான் வாங்கி கொள்கிறார்கள். மனுபான கடை வைப்பதற்கு முன்பாக திலீபன் அந்த கடையில் பைப் வியாபாரம் நடக்கும் போதே 15 ஆண்டுகளுக்கு மேலாக கடைக்கு முன்னால் கடல் மீன் வியாபாரம் செய்து வந்தார் என்றாலும் பிறகு கடை காலியான பிறகு மீன் வியாபாரமும், ஓட்டல் வியாபாரமும் செய்து வந்தார் என்றால் மீன் வியாபாரம் செய்து வந்தது தெரியும். ஆனால் திலீபன் செய்தது தெரியாது.

*12)* என் அம்மா ஆளுமை மிகுந்த நபர் என்றால் சரிதான். நாங்கள், ராஜவேலு எல்லோரும் என் அம்மாவின் பேச்சுக்கு கட்டுப்பட்டு நடப்போம் என்றால் என் மீது எல்லோருக்கும் மரியாதையுண்டு. அவர் அவர்கள் அவர் அவர் விருப்பம் படி நடப்போம். என் அப்பாவிற்கு தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் இருந்ததாக கேள்விப்பட்டேன். ஒரு கடை மட்டும் தான் உள்ளது. *1959*ல் பாகபிரிவினை பத்திரத்தில் என் அப்பாவிற்கு பி ஜாபிதா சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் ஏரிகரை அருகே ஒரு நிலமும், அண்ணாதுரை ரோடுக்கு பின்னால் ஒரு கடையும் இருந்தது. அந்த சொத்துக்களை விற்று தான் என் அம்மா எங்களை படிக்க வைத்து திருமணம் செய்து கொடுத்தார். வேறு சொத்துக்கள் என்னவென்று தெரியாது.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)*